செ.வெ.எண்:36/பிப்ரவரி நாள்: 19.02.2016

**இராமநாதபுரம் மாவட்டம்**

**விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் ரூபாய் 1.91 இலட்சம் மதிப்பிலான மானியத்துடன் கூடிய வேளாண் கருவிகளை**

**மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (19.02.2016) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஏற்கனவே விவசாயிகளிடமிருந்து பெறப்பட்ட மனுக்களின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து தெரிவிக்கப்பட்டது. மேலும் வேளாண்மைத்துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, தோட்டக்கலைத்துறை, மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, கால்நடை பராமரிப்புத்துறை உள்ளிட்ட வேளாண் தொடர்புடைய துறைகளில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து அலுவலர்களால் எடுத்துரைக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் வேளாண்மைத் துறையின் சார்பாக தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 5 பயனாளிகளுக்கு மொத்தம் ரூபாய் 1 இலட்சத்து 91 ஆயிரம் மதிப்பிலான மானியத்துடன் கூடிய ரோட்டோவேட்டர் வேளாண்மை இயந்திரங்களை வழங்கினார்.

இக்கூட்டத்தில் வேளாண்மைத்துறை இணை இயக்குநர் திரு.வி.கிருஷ்ணமூர்த்தி, வேளாண்மைப் பொறியியல் துறை செயற்பொறியாளர் திரு.எஸ்.முகமது அலி, உதவிப் பொறியாளர் திரு.சிவக்குமார் உட்பட அரசு அலுவலர்கள், விவசாயிகள் சங்கப்பிரதிநிதிகள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம் : மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**